# October 11, 2026 – தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1.டீசல் கொள்முதல் தொடர்பாக ரஷ்யாவுடன் அமெரிக்கா ஒப்பந்தம்

(i) எரிபொருள் தட்டுப்பாடு மற்றும் உள்நாட்டுப் பொருளாதார நெருக்கடி

- மத்திய கிழக்கில் நிலவும் மோதல் மற்றும் உலகளாவிய விநியோகச் சங்கிலியில் ஏற்பட்டுள்ள பாதிப்புகள் காரணமாக, அமெரிக்கா கடுமையான டீசல் தட்டுப்பாட்டை எதிர்கொண்டு வருகிறது.
- அமெரிக்காவில் டீசலின் சராசரி விலை கடந்த ஆண்டு ஒரு கேலனுக்கு 3.68 டாலராக இருந்த நிலையில், தற்போது 6.28 டாலராக உயர்ந்துள்ளது.
- எரிபொருள் விலை உயர்வு மற்றும் பணவீக்கம் ஆகியவை, நவம்பர் தொடக்கத்தில் நடைபெறவுள்ள அமெரிக்க நாடாளுமன்ற இடைக்காலத் தேர்தலுக்கு முன்னதாக ஆளும் குடியரசுக் கட்சிக்குப் பெரும் அரசியல் சவாலாக உருவெடுத்துள்ளன.

(ii) அமெரிக்கா–ரஷ்யா டீசல் ஒப்பந்தம் மற்றும் கட்டம் கட்டமான கொள்முதல்

- ரஷ்ய அதிபர் விளாதிமிர் புதினுடன் விரிவான தொலைபேசி உரையாடல்களை நடத்தியதைத் தொடர்ந்து, ஒப்பந்தம் இறுதி செய்யப்பட்டுள்ளதாக அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் தனது 'Truth Social' சமூக ஊடகத் தளத்தில் அறிவித்தார்.
- அமெரிக்கா மற்றும் சர்வதேசச் சந்தைகளின் தேவைக்காக, உடனடியாக 3 லட்சம் டன்னுக்கும் அதிகமான டீசலை வழங்க ரஷ்யா ஒப்புக்கொண்டுள்ளது.
- இந்த ஒப்பந்தத்தின்படி, அடுத்த மாதம் 5 லட்சம் டன் டீசல் கொள்முதல் செய்யப்படும். அதைத் தொடர்ந்து, கூடுதலாக 10 லட்சம் டன் டீசல் வாங்கப்படும்.
- ரஷ்யாவின் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையங்களின் உற்பத்தித் திறனைப் பொறுத்து, அமெரிக்காவின் சரக்குப் போக்குவரத்து வாகன ஓட்டுநர்கள் மற்றும் விவசாயிகளுக்கு நிவாரணம் அளிக்கும் வகையில், குறுகிய காலத்தில் கூடுதலாக 30 லட்சம் டன் டீசல் வரை வழங்கப்படலாம்.

(iii) தடைகளிலிருந்து தற்காலிக விலக்கு

- டிரம்பின் அறிவிப்பைத் தொடர்ந்து, எரிபொருள் விநியோகத்தை எளிதாக்கும் நோக்கில், ரஷ்ய எரிபொருள் மீதான குறிப்பிட்ட பொருளாதாரத் தடைகளுக்கு அடுத்த ஆண்டு ஏப்ரல் 7-ஆம் தேதி வரை தற்காலிக விலக்கு அளித்து அமெரிக்க நிதித்துறை உத்தரவு பிறப்பித்தது.

(iv) அரசியல் எதிர்ப்பு மற்றும் சர்வதேச விமர்சனங்கள்

- இந்த ஒப்பந்தத்தை உக்ரைன் அதிபர் வொலோதிமிர் ஸெலென்ஸ்கி கடுமையாக விமர்சித்தார். புதினுக்கு அளிக்கப்படும் சலுகைகள்

அமைதியை ஏற்படுத்தாது என்றும், ரஷ்யாவுக்கு வருவாய் கிடைக்கச் செய்வது அதன் ராணுவ நடவடிக்கைகளுக்கு மறைமுகமாக நிதியளிப்பதற்குச் சமம் என்றும் அவர் தெரிவித்தார்.
- அமெரிக்க ஜனநாயகக் கட்சியினரும் குடியரசுக் கட்சியைச் சேர்ந்த பல நாடாளுமன்ற உறுப்பினர்களும் இந்த நடவடிக்கைக்குக் கடும் எதிர்ப்புத் தெரிவித்தனர்.

(v) வெளியுறவுக் கொள்கையில் முரண்பாடு மற்றும் உலகளாவிய தாக்கம்

- ரஷ்யாவிடமிருந்து தொடர்ந்து எரிபொருள் வாங்கும் இந்தியா உள்ளிட்ட நாடுகள் மீது அதிக இறக்குமதி வரிகளை விதிக்க அதிகாரம் வழங்கும் சட்டத்தை அமெரிக்க நாடாளுமன்றம் கடந்த மாதம் நிறைவேற்றியது.
- பிற நாடுகள் ரஷ்யாவிடமிருந்து எரிபொருள் வாங்கினால் தடைகள் விதிக்கப்படும் என்று எச்சரித்த அமெரிக்கா, குறுகிய காலத்திலேயே ரஷ்யாவிடமிருந்து நேரடியாக எரிபொருள் கொள்முதல் செய்ய முடிவெடுத்துள்ளது.
- அமெரிக்காவின் இந்த முடிவு, அதன் வெளியுறவுக் கொள்கையில் உள்ள முரண்பாடுகள் குறித்தும் சர்வதேச அளவில் பரவலான விவாதத்தை ஏற்படுத்தியுள்ளது.

2. மத்திய அமெரிக்க நாடான பனாமாவில் அடுத்தடுத்து ஏற்பட்ட இரு சக்திவாய்ந்த நிலநடுக்கங்களால், கட்டடங்கள் இடிந்து பெரும் சேதமடைந்தன.

(i) ஹெர்ரேரா மாகாணத்தில் உள்ள பிடலோஸா அர்ரிபா பகுதிக்கு அருகே காலை 10 கி.மீ. ஆழத்தில் ரிக்டர் அளவுகோலில் 7.7 அலகுகளாகப் பதிவான நிலநடுக்கம் ஏற்பட்டது. அதைத் தொடர்ந்து, மாலையில் 6.6 ரிக்டர் அளவில் மற்றொரு நிலந்டுக்கமும், 45-க்கும் மேற்பட்ட நில அதிர்வுகளும் ஏற்பட்டதால் பொதுமக்கள் வீடுகளை விட்டு வெளியேறி, வீதிகளில் தஞ்சம் புகுந்தனர். அண்டை நாடான கொலம்பியா வரை இதன் அதிர்வுகள் உணரப்பட்டன.

3. அண்டை நாடான எரித்ரியா தனது எல்லைக்குள் படைகளை அனுப்பி, சில பகுதிகளை ஆக்கிரமித்துள்ளதாகவும்; இதற்கு எதிராக தற்காப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் ஐ.நா.பாதுகாப்பு கவுன்சிலிடம் எத்தியோப்பியா தெரிவித்துள்ளது.

(i) எரித்ரியா கடந்த சில வாரங்களாக படைப் பிரிவுகளைக் களமிறக்கியுள்ளதாகவும், டிக்ரே பகுதி கிளர்ச்சியாளர்களுக்கு நிதியுதவி மற்றும் ஆயுதங்களை வழங்கி வருவதாகவும் எத்தியோப்பியா குற்றஞ்சாட்டியுள்ளது. இது தொடர்பாக ஐ.நா. சாசனத்தின் 51-ஆவது பிரிவின்கீழ் தங்களுக்குள்ள தற்காப்பு உரிமையைப் பயன்படுத்துவதாக அந்நாட்டு வெளியுறவு அமைச்சர் கிடியோன் திமோதியோஸ் கடிதம் எழுதியுள்ளார்.

(ii) அதேநேரம், செங்கடல் பகுதியை அடைவதற்கான வழியைக் கோரி எத்தியோப்பியாவே ஆக்கிரமிப்புப் போக்கை முன்னெடுப்பதாக எரித்ரியா பதில்

குற்றச்சாட்டை முன்வைத்துள்ளது.

(iii) எரித்ரியா தூதர்கள் 10 பேரை எத்தியோப்பியா கடந்த வாரம் வெளியேற்றியதைத் தொடர்ந்து, இரு நாடுகளுக்கும் இடையே ராஜீய உறவுகள் துண்டிக்கப்பட்ட நிலையில் மோதல் மேலும் தீவிரமடைந்துள்ளது. கடந்த 2020-2022 காலகட்டத்தில் டிக்ரே பகுதி கிளர்ச்சியாளர்களுக்கு எதிராக இணைந்து செயல்பட்ட இரு நாடுகளுக்கு இடையேயான இந்த விரிசல், புதிய போர் அச்சத்தை உருவாக்கியுள்ளது.

4. அகமதாபாதில் திங்கள் கிழமை தொடங்கவுள்ள பிரிக்ஸ் அமைப்பு பாரம்பரிய, சுய போட்டிகள் 2026- ஐ மத்திய விளையாட்டு அமைச்சர் மன்சுக் மாண்டவியா தொடங்கி வைக்கிறார். இதில் இந்திய தரப்பில் மல்லர் கம்பம், யோகாசனம், களரியப்பட்டு இடம் பெறும். பெலாரஸ், சீனா, ரஷியா, எத்தியோபியா, ஈரான், கஜகஸ்தான், தென்னாப்பிரிக்கா, யுஏஇ நாடுகளைச் சேர்ந்தவர்கள் பங்கேற்கின்றனர்.

5. இந்திய ஒலிம்பிக் சங்கத் தேர்தல் வரும் டிச. 5-ஆம் தேதி நடைபெறவுள்ளதாக ஐஓஏ தலைவர் பி.டி.உஷா தெரிவித்துள்ளார். தேர்தல் நடைமுறை மேற்கொள்வதற்காக தில்லி முன்னாள் தேர்தல் ஆணையர் சஞ்சய் ஸ்ரீவத்சவா நியமிக்கப்பட்டுள்ளார். புதிய நிர்வாகக் குழு உறுப்பினர்கள் நான்கு ஆண்டுகள் (2026-30) பதவி வகிப்பர். இதுதொடர்பாக பி.டி.உஷா கூறியது:

- தேசிய விளையாட்டு ஆட்சிமுறை சட்டம் 2025-இன் படியும், 2026 ஐஓஏ விதிகளில் திருத்தம் மேற்கொள்ளப்பட்டது. இதன்படி தேர்தல்கள் நடைபெறும். 2026 தேர்தல் அதிகாரியாக சஞ்சய் குமார் ஸ்ரீவத்சவா நியமிக்கப்பட்டுள்ளார். அதலெட்ஸ் கமிஷன், சிறந்த வீரர், வீராங்கனைகள் தேர்வு, நிர்வாகக் குழு தேர்தல்களை அவர் மேற்கொள்வார்.
- கடந்த 2022-இல் நடைபெற்ற தேர்தலில் 77 உறுப்பினர்களில் பிவி.சிந்து, ககன் நரங், சாக்ஷி மாலிக், யோகேஷ்வர்தத், எம்எம் சோமையா உள்பட முன்னாள், இந்நாள் வீரர்களும் அடங்குவர்.
- கடந்த சில நாள்களுக்கு முன்பு நிர்வாகக் குழு உறுப்பினர்கள் எண்ணிக்கை 16- ஆக தொடர மத்திய விளையாட்டு அமைச்சகம் அனுமதி தந்திருந்தது. மேலும், ஐஓஏ நிர்வாகத்தில் வெளிப்படைத் தன்மை, கடமையுடன் நடைபெறுகிறது என்றார்.

(i) கடந்த 2022-இல் இந்திய ஒலிம்பிக் சங்கத்தின் முதல் பெண் தலைவராக பி.டி. உஷா தேர்வு செய்யப்பட்டிருந்தார்.

(ii) வரும் 2036-ஆம் ஆண்டில் ஒலிம்பிக் போட்டியை நடத்த இந்தியா முயற்சித்து வரும் நிலையில் இத்தேர்தல் முக்கியமானதாக கருதப்படுகிறது.

6.இந்தியாவுக்கு அடுத்த வாரம் 300 வர்த்தகப் பிரதிநிதிகளைக் கொண்ட குழுவை கனடா அனுப்பவுள்ளது.

(i) இந்தியா-கனடா இடையேயான இருதரப்பு வர்த்தக உறவை 2030-க்குள் ரூ.4.75 லட்சம் கோடியாக (70 பில்லியன் டாலர்) உயர்த்த இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

(ii) 2025 நிலவரப்படி இரு நாடுகளிடையேயான இருதரப்பு வர்த்தக மதிப்பு ரூ.2.06 லட்சம் கோடியாக (30.4 பில்லியன் டாலர்) உள்ள நிலையில், இதை இரட்டிப்பாக்கும் நோக்கில், கடந்த 30 ஆண்டுகளில் இல்லாத வகையில் அதிகப்படியான உறுப்பினர்களைக் கொண்ட குழுவை கனடா அனுப்புகிறது.

(iii) இந்தியாவுக்கு கடந்த மார்ச் மாதம் சுற்றுப்பயணம் மேற்கொண்ட கனடா பிரதமர் மார்க் கார்னி பிரதமர் நரேந்திர மோடியைச் சந்தித்த பின் இருதரப்பு உறவை மேலும் வலுப்படுத்துவதற்கான விரிவான பொருளாதார ஒத்துழைப்பு ஒப்பந்தத்தை (சிஇபிஏ) இருவரும் அறிவித்தனர்.

(iv) இதைத் தொடர்ந்து, இந்த ஒப்பந்தத்தை நிகழாண்டுக்குள் இறுதி செய்ய இரு நாடுகளின் வர்த்தக குழுக்கள் கடந்த சில மாதங்களாக பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றன. இதன் ஒரு பகுதியாக ஒட்டாவாவில் அக்டோபர் 5-ஆம் தேதி முதல் அக்டோபர் 9-ஆம் தேதி வரை இரு நாடுகளும் ஐந்தாம் சுற்றுப் பேச்சுவார்த்தை நடத்தின.

(v) இந்நிலையில், கனடா சர்வதேச வர்த்தக அமைச்சர் மனீந்தர் சித்து தலைமையில் 300 வர்த்தகப் பிரதிநிதிகளைக் கொண்ட குழு அடுத்த வாரம் இந்தியா வரவுள்ளது. அக்டோபர் 12-ஆம் தேதி முதல் அக்டோபர் 17-ஆம் தேதி வரை மும்பை மற்றும் பெங்களூரு ஆகிய நகரங்களில் இந்தியப் பிரதிநிதிகளுடன் இந்தக் குழு இரு தரப்பு வர்த்தகப் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளது.

(vi) முன்னதாக, அமெரிக்காவின் விஸ்கான்சின் மாகாணத்தில் உள்ள மில்வாக்கி நகரில் நடைபெற்ற ஜி20 வர்த்தக மாநாட்டில் பங்கேற்ற இந்திய வர்த்தகத் துறை அமைச்சர் பியூஷ் கோயல், அக்டோபர் 1-ஆம் தேதி மனீந்தர் சித்துவை சந்தித்து ஆலோசனை நடத்தினார்.

7. நாடு முழுவதும் உள்ள நீதிபதிகளின் தொழில்முறை மற்றும் தனிப்பட்ட வாழ்வைப் பாதிக்கும் விவகாரங்களைக் கண்டறிந்து தீர்ப்பதற்கான நிறுவன ரீதியான வழிமுறை கட்டமைப்பை உருவாக்க நிலைக் குழு ஒன்றை உச்சநீதிமன்றம் அமைத்தது. உச்சநீதிமன்ற நீதிபதி கே.வி.விஸ்வநாதன் தலைமையிலான இந்த நிலைக் குழுவை, தலைமை நீதிபதி சூர்ய காந்த் அமைத்து உத்தரவிட்டார்.

(ii) நீதிபதிகளின் நல்வாழ்வு என்பது வெறும் தனிப்பட்ட நலன் சார்ந்த விஷயம் மட்டுமல்ல; மாறாக, நீதி நிர்வாகத்தின் செயல்திறன், தரம் மற்றும் நிலைத்தன்மையுடன் நெருங்கிய தொடர்புடையது. நீதிபதிகளின் நல்வாழ்வு தொடர்பான தற்போதைய மற்றும் புதிதாக எழும் சவால்களை ஆய்வு செய்வதற்கான ஒரு தொடர்ச்சியான நிறுவன ரீதியான தளமாக இந்த நிலைக் குழு செயல்படும்.

(iii) உச்சநீதிமன்ற நீதிபதி கே.வி.விஸ்வநாதன் தலைமையிலான இந்த நிலைக்

குழுவில், சண்டீகர் முதுநிலை மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவன முன்னாள் டீன் மருத்துவர் சவிதா மல்ஹோத்ரா, மனநல நிபுணர் ரஜத் மித்ரா, உச்சநீதிமன்ற வழக்குரைஞர் மிருணாள் கன்வார், உச்சநீதிமன்ற ஆராய்ச்சி மற்றும் திட்டமையப் பதிவாளர் ஆர்த்தி சிங் ஆகியோர் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

8. இஸ்ரேலுடன் தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் செய்து கொள்வது குறித்து இந்தியா பேச்சு வார்த்தை நடத்தி வருவதாக மத்திய வர்த்தக மற்றும் தொழில்துறை அமைச்சர் பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார். புது தில்லியில் நடைபெற்ற பிஎச்டி சிசிஐ தொழில்துறை கூட்டமைப்பு நிகழ்ச்சியில், இதுகுறித்து அவர் மேலும் பேசியதாவது:

(i) இந்தியா, அமெரிக்கா இடையே தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் செய்து கொள்வது தொடர்பான அறிவிப்பு கடந்த பிப்ரவரி மாதம் வெளியிடப்பட்டது. ஆனால் தற்போதைய சூழலை மனதில் வைத்து ஒப்பந்தம் குறித்து இறுதி முடிவு எடுக்கப்படும்.

(ii) கனடாவுடன் தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் செய்து கொள்வது குறித்து நடை பெறும் பேச்சுவார்த்தையில் நல்ல முன்னேற்றம் உள்ளது. இதே போக்கா தலைமையிலான எஸ்ஏஜியு கூட்டமைப்புடன் தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் செய்து கொள்வது குறித்து இந்தியா விரைவில் பேச்சுவார்த்தையை தொடங்கவுள்ளது. மெக்சிகோ நாட்டுடன் அடுத்த வாரம் பேச்சுவார்த்தையை இந்தியா தொடங்கவுள்ளது.

(iii) மேலும், இஸ்ரேல், சிலி, வளைகுடா நாடுகள் கூட்டமைப்பு (ஜிசிசி), ரஷியா தலைமையிலான யூரேஷியன் பொருளாதார யூனியன் (இஏஇயு) ஆகியவற்றுக்கும் இந்தியாவுக்கும் இடையே தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் குறித்து தொடர்ந்து பேச்சுவார்த்தை நடக்கிறது. பிரிட்டன், கனடா நாட்டு வர்த்தகத் துறை அமைச்சர்கள் அடுத்த வாரம் இந்தியாவுக்கு வந்து வர்த்தக விவகாரம் குறித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளனர் என்றார் அவர்.

9. 'மிஷன் சக்தி' (Mission Shakti) திட்டமானது, பெண்களின் பாதுகாப்பு, பந்தோபஸ்து மற்றும் அதிகாரமளித்தலை வலுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இத்திட்டம் இரண்டு துணைத் திட்டங்களைக் கொண்டுள்ளது:

- சம்பல் (Sambal): பெண்களின் பாதுகாப்பு மற்றும் பந்தோபஸ்தை உறுதி செய்வதற்கான துணைத் திட்டம்.
- சமர்த்தியா (Samarthya): பெண்களின் அதிகாரமளித்தலை மேம்படுத்துவதற்கான துணைத் திட்டம்.

10. அண்டை நாடுகளின் பாதுகாப்பு நடவடிக்கைகளை இந்தியா உன்னிப்பாக கவனித்து வருவதாக பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் தெரிவித்தார்.

(i) ராஜஸ்தானின் ஜோத்பூர் விமானப் படை தளத்தில் செப்டம்பர் 26-ஆம் தேதி

தொடங்கி நடை பெற்றுவரும் 'தரங் சக்தி' விமானப் படை கூட்டுப் பயிற்சியில் பங்கேற்று ராஜ்நாத் சிங் பேசியதா வது:

- ஆத்மநிர்பர் பாரத் தொலை நோக்குத் திட்டத்துக்கேற்ப இந்திய ஆயுதப் படைகளில் கட்டமைப்பு ரீதியாகவும், வியூக ரீதியாகவும் பல்வேறு மாற்றங்கள் செய்யப்பட்டு வருகின்றன. இந்த முன்னெடுப்பு உலக நாடுகளில் இருந்து இந்தியாவை தனிமைப் படுத்தும் முயற்சியல்ல; மாறாக நவீன தொழில்நுட்பங்களுடன் கூடிய பாதுகாப்பு உபகரணங்களை உள்நாட்டில் தயாரிக்க, வடிவமைப்பதற்கான கட்டமைப்பை மேம்படுத்துவதே இதன் முக்கிய நோக்கம்.
- ஜேதஸ் போர்விமானம், துருவ் ருத்ரா மற்றும் பிரசண்ட் ஆகிய ஹெலிகாப்டர்கள், ஆகாஷ்வான் பாதுகாப்பு அமைப்பு ஆகியவை உள்நாட்டுத் தயாரிப்புக்கான சான்றாகத் திகழ்கிறன என்றார்.

(ii) ஜோத்பூர் விமானப் படைத் தளத்தில் செப்டம்பர் 26 முதல் அக்டோபர் 12-ஆம் தேதி வரை நடைபெறும் இந்தக் கூட்டு விமானப் பயிற்சியில் அமெரிக்கா, பிரான்ஸ், ஜெர்மனி, ஆஸ்திரேலியா, வங்கதேசம், இலங்கை, ஐக்கிய அரபு அமீரகம் ஆகிய 7 நாடுகள் பங்கேற்றுள்ளன.